உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

**அடிகாசு வசூல் செய்வதற்கான உரிமம் கோருவதற்கான ஏல படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தந்தை/கணவர் பெயர் | : | |
| 3. | முகவரி | : | |
| 4. | கைபேசி எண் | : | |
| 5. | நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஏலத்தொகை | : | ரூ.8,01,350/- |
| 6. | விண்ணப்பதாரர் கோரும் அதிகபட்ச ஏலத்தொகை (வரிசை எண் 5-ல் குறிப்பிட்டுள்ள தொகையைவிட அதிகமான தொகையை குறிப்பிடவும்) | : | |
| 7. | பிணை வைப்புத் தொகையின் விபரம் | : | ரூ.40,070/- |
| | வங்கியின் பெயர் | : | |
| | வரைவோலை எண் | : | |
| | வரைவோலை தேதி | : | |

ஏலம் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் படித்து தெரிந்துகொண்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு இந்த ஏலப்படிவத்தை சமர்ப்பிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம்:
தேதி:

**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி-5**

கோ.எண்:42-46/வருவாய்/உ.ந./2022-23 ஜவகர் நகர், தேதி 25/11/22

## அடிகாசு கட்டணம் வசூல் செய்வதற்கான பொது ஏல அறிவிப்பு

உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான நவின சுகாதார மீன் அங்காடி மற்றும் அஜீஸ் நகர் அங்காடி வளாகங்கள் தவிர்த்து மற்ற அங்காடி வளாகங்கள் மற்றும் உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர கடைகளில் ஓராண்டு காலத்திற்கு அடிகாசு கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் பெற பகிரங்க பொது வாய்மொழி ஏலம் கீழ்கணும் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளின்படி நடத்தப்பட உள்ளது.

ஏலத்தேதி மற்றும் நேரம்: 08-12-2022 (வியாழக்கிழமை) மாலை 4 மணி
ஏலம் நடைபெறும் இடம்: உழவர்கரை நகராட்சி, ஜவகர் நகர், புதுச்சேரி.

| நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத் தொகை (ஓராண்டு காலம்) ரூ | பிணை வைப்பு தொகை ரூ |
|---|---|
| 8,01,350/- | 40,070/- |

## ஏல நிபந்தனைகள்

1. ஏலம் எடுப்பவர் தனிநபராக இருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டு சேர்ந்து ஏலம் எடுப்பது கூடாது.

2. ஏலப்படிவம் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காசாளரிடம் ரூபாய் 500/- மற்றும் 5% சரக்கு மற்றும் சேவைவரி (GST) செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது உழவர்கரை வலைதளமான www.oulmun.in -ல் இருந்து பதிவிறக்கம் செய்து சமர்பிக்கலாம். பதிவிறக்கம் செய்த ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் போது ரூபாய் 500/- மற்றும் 5% GST சேர்த்து "The Commissioner, Oulgaret Municipality, Puducherry" என்ற பெயரில் வரைவோலையை (Demand Draft) ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஏலம் கேட்க விரும்புவோர் பூர்த்திசெய்து கையொப்பமிட்ட ஏலப்படிவம் மற்றும் அதற்குண்டான பிணை வைப்புத் தொகையை ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி (The Commissioner, Oulgaret Municipality, Puducherry) என்ற பெயரில் ஏதேனும் ஒரு அரசு அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வரைவோலை (Demand Draft) கண்டிப்பாக ஏலப்படிவத்துடன் இணைத்து சமர்பித்தல் வேண்டும். பிணை வைப்புத் தொகை இல்லாமல் சமர்பிக்கும் ஏலப்படிவம் நிராகரிக்கப்படும்.

4. ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் 08-12-2022 மாலை 3 மணி வரை ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவங்களை மூடி அரக்கு முத்திரை இடப்பட்ட உறையினில் "ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி" என்று குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் அடிகாசு ஏல விண்ணப்பப் படிவம் என்று குறிப்பிட வேண்டும்.

5. ஏலத்தில் பங்கேற்போர் உழவர்கரை நகராட்சியில் பெறப்பட்ட வரி பாக்கியில்லா சான்றிதழை ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்தல் வேண்டும். மேற்படி சான்றிதழ் இல்லாமல் சமர்பிக்கும் ஏலப்படிவம் நிராகரிக்கப்படும்.

6. உழவர்கரை நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத்தொகையை விட அதிகமாக ஏலத்தொகை குறிப்பிட வேண்டும். குறைந்தபட்ச ஏலத்தொகையை விட குறைவாக குறிப்பிடும் ஏலப்படிவம் நிராகரிக்கப்படும். **எவருடைய ஏலப்படிவத்தில் ஏலத்தொகை அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த தொகையிலிருந்து வாய்மொழி ஏலம் ஆரம்பிக்கப்படும்.**

7. ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை கேட்பவர் வெற்றி பெற்ற ஏலதாரர் ஆவார். ஏலம் எடுத்தவர் ஏலத் தொகையை அதேநாளில் காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்துதல் வேண்டும். தவறினால் அவர் செலுத்திய பிணை வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் இரண்டாவது அதிகபட்ச ஏலதாரருக்கு ஏலத்தொகை அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்படும்.

8. ஏல தொகையை செலுத்திய தேதிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு அடிகாசு கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் வழங்கப்படும்.

9. ஏலத்தில் வெற்றி பெற்ற ஏலதாரர் சாலை ஓரங்களில் பொருட்களை வைத்து விற்பனை செய்பவர்களிடம் அடிகாசு வசூலிக்கும் பொருட்டு ஒரு சதுர மீட்டர் அல்லது அதற்கு குறைவான இடத்திற்கு நாள் ஒன்றிற்கு தலா ரூபாய் 10/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும்.

10. விண்ணப்பம் அளித்த நபர்கள் மட்டுமே ஏலத்தில் பங்குபெற அனுமதிக்கப்படுவர். வெற்றி பெறாத ஏலதாரரின் முன்வைப்பு தொகை அன்றே திருப்பி தரப்படும்.

11. ஏலம் தொடர்பான இதர நிபந்தனைகளை உழவர்கரை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் அதிகாரியை நேரில் சந்தித்து தெரிந்துகொள்ளலாம்.

12. ஏலத்தை தள்ளி வைப்பதற்கும் அல்லது நிறுத்தி வைப்பதற்கும் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

**(ஆ. சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**